சுருக்கம்

பாசனம் – நீர்வள ஆதாரத்துறை – திருச்சி மாவட்டம், திருச்சி வட்டம் பாப்பாக்குறிச்சி கிராமத்தில் உய்யக்கொண்டான் வாய்க்காலின் குறுக்கே மைல் 24/3 அருகில் வடிகால் வசதிக்காக ஒரு சைபன் (அக்யூடெட்) கட்டுக்கால்வாய் அமைக்கும் திட்டப்பணியினை ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில் 2009–2010ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் கட்டுதல் – நிர்வாக ஒப்புதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணித் (என்.2) துறை

அரசாணை (நிலை) எண்.150 நாள். 05.08.2009.

படிக்க:-

தலைமைப்பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்களின் கடித எண். எப்.9000/2008, நாள். 20.01.2009.

------

ஆணை:-

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், நீர்வள ஆதாரத்துறையின் தலைமைப்பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்கள் திருச்சி மாவட்டம், திருச்சி வட்டம் பாப்பாக்குறிச்சி கிராமத்தில் உய்யக்கொண்டான் வாய்க்காலின் நெடுகை மைல் 24/3 அருகில் வடிகால் வசதிக்காக ஒரு சைபன் கட்டுக்கால்வாய் (அக்யூடெகட்) அமைக்கும் திட்டப்பணியினை ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில் 2009–2010 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் செயல்படுத்த நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

2. இப்பணிக்காக விவரம் பின்வருமாறு:-

திருச்சி மாவட்டம், மற்றும் வட்டம், பாப்பாக்குறிச்சி கிராமத்தில் உய்யக்கொண்டான் வாய்க்கால் காவிரி ஆற்றிலிருந்து பிரியும் கால்வாய்களுள் முக்கியத்துவம் வாய்ந்த கால்வாய் ஆகும். இக்கால்வாயின் நீளம் 43 மைல்கள் ஆகும் என்றும் இது திருச்சி மாவட்டம் பெட்டவாய்த்தலை அருகில் காவிரியிலிருந்து பிரிந்து திருச்சி, தஞ்சாவூர் மாவட்டங்களில் 32,274 ஏக்கர் நிலங்களுக்கு பாசனத்திற்காக தண்ணீர் வழங்கி கடைசியாக திருச்சி மாவட்டத்தில் வாழவந்தான் கோட்டை ஏரியில் முடிவடைகிறது என்றும், இவ்வாய்க்கால் நெடுகை மைல் 24/3ல் திருச்சி மாவட்டத்தில் பாப்பாக்குறிச்சி கிராமத்தில் வடிகால் உள்வாங்கி (Drainage inlet) ஒன்று உள்ளது என்றும், இது நீண்ட காலத்தில் கட்டப்பட்டது என்றும் பாப்பாக்குறிச்சி கிராமத்தில் உள்ள விளை நிலங்கள் 400 ஏக்கர் நாளடைவில் குடியிருப்புகளாக மாற்றப்பட்டு வருவதால் மழைகாலங்களில் தண்ணீர் சரியாக வழிந்தோடாமல் விளைநிலப்பகுதிகள், குடியிருப்புகள் ஆகிய இடங்களில் தேங்கி மக்களின் உடமைகளுக்கும், பயிர்களுக்கும், கால்நடைகளுக்கும் சேதம் விளைவிக்கிறது. நகரமயமாக்கல், குடியிருப்புகள் அமைத்தல் போன்ற சில காரணங்களால் உய்யகொண்டான் வாய்க்கால் முழுமட்ட அளவு அடுத்தாற் போல் உள்ள நிலப்பகுதியை விட சற்று உயரமாக மாறிவிட்டதால் தற்போது அமைந்துள்ள வடிகால் உள்வாங்கி (drainage inlet) சரியாக வேலை செய்வதில்லை. எனவே இவ்வாய்க்கால் நெடுகை மைல் 24/3ல் ஒரு Syphon aqueduct அமைப்பது அவசியமாகிறது என்றும், இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை 2009–2010ஆம் ஆண்டில் ரூ.35.00 இலட்சம் என்றும், இத்திட்டம் திருச்சி மண்டல தலைமைப்பொறியாளர் அவர்களால் செயலாக்கப்படும் என்றும் எனவே

இத்திட்டத்தினை செயல்படுத்த கூடுதல் பணியாளர்கள் தேவைப்படாது எனவும் தலைமைப்பொறியாளர் (திட்ட உருவாக்கம்) தெரிவித்துள்ளார்.

3. பாப்பாக்குறிச்சி கிராமத்தில் உய்யக்கொண்டான் வாய்க்காலின் நெடுகை மைல் 24/3 அருகில் வடிகால் வசதிக்காக ஒரு சைபன் அக்யூடெக்ட் அமைக்கும் திட்டப்பணியினை ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில் 2009–2010ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் செய்வதற்கு நிலைநிதிக்குழு ஏற்பளித்துள்ள நிலையில் திருச்சி மாவட்டம், திருச்சி வட்டம், பாப்பாக்குறிச்சி கிராமத்தில் உய்யக்கொண்டான் வாய்க்காலின் நெடுகை மைல் 24/3 அருகில் வடிகால் வசதிக்காக ஒரு சைபன் அக்யூடெக்ட் அமைக்கும் திட்டத்தை ரூ.35.00 இலட்சங்கள் (ரூபாய் முப்பத்தைந்து இலட்சங்கள்) நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது. சில்லரைச் செலவினம் சிறு மேற்பார்வை செலவுகள் மற்றும் எதிர்பாரா செலவுகள் ஆகிய அனைத்து இனத்தின் கீழ் ஏற்படும் மொத்த செலவுகள் மொத்த பணி (Works) மதிப்பீட்டுத் தொகையில் 2.5% மேல் மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்த்னையுடன் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

4. மேற்கண்ட பணிக்கான செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படல் வேண்டும்.

4702–00 சிறு பாசனம் குறித்த முலதனச் செலவு – 101 – மேற்பரப்பு நீர் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II மாநில திட்டம் – ஜெ.ஏ. சிறுபாசன சிறப்புத் திட்டம் – 16 பெரும்பணிகள் (து.தொ.கு.4702 00 101 ஜெ.ஏ 1607).

5. தலைமைப்பொறியாளர், திருச்சி மண்டலம் அவர்கள் மேற்கண்ட திட்டத்தை செயல்படுத்தி, திட்டப்பணி முன்னேற்றம் குறித்த அறிக்கை உடனுக்குடன் அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா. எண்.32891/PW.II/09 நாள். 17.6.2009 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு.இராமசுந்தரம்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மை தலைமைப்பொறியாளர், (நீஆது) மற்றும்
தலைமைப்பொறியாளர் (பொது),
பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை–5.
தலைமைப்பொறியாளர் (திட்ட உருவாக்கம்), சென்னை–5.
நகல்கள்
பொதுப்பணித்துறை ஐபெஷல் பிரிவு, சென்னை–9.
நிதி(பொ.ப.II/வ.செ.பொ.II)த்துறை, சென்னை–9.
சம்பளக்கணக்கு அலுவலர், சென்னை–9.
மாநிலக் கணக்காயர், சென்னை 18/35.
அனைத்துப் பாசனப் பிரிவுகள், சென்னை–9.
நிதி/பொ.ப.I/பொ.வ.செ. II)த் துறை, சென்னை–9.

/ஆணைப்படி / அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.